REGISTRAR OF NEWSPAPER FOR INDIA TNBIL / 2005 / 15261 R.Dis no.1834/04 Date of Publication : 1st Week of Every Month 4 Pages


CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals




AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION Film - 16 JANUARY 2021 Click - 10 Re. 1

# மார்க்கெட்டில் அசத்தும் சோனி a7s மார்க் 3 ஃபுல் ஃபிரேம் மிரர் லெஸ் கேமரா !!

ஒளிப்படக் கலைஞர்கள் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்த சோனி a7s மார்க் 3 மிரர்லஸ் ஃபுல் ஃபிரேம் கேமரா ஏறக்குறைய ஐந்து வருட எதிர்பார்ப்புக்கு பின் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த கேமரா முழுக்க முழுக்க வீடியோ மேக்கிங்கை கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த கேமராவின் வெளிப்புற வடிவமைப்பில் எந்தவித மாற்றமும் இல்லா விட்டாலும், கேமராவினுள் புதுப்புது தொழில்நுட்ப விஷயங்கள் புகுத்தப்பட்டுள்ளன. 12.1 மெகாபிக்சல் எனும் அளவில், BSI சென்சாருடன் (Back Side I'lluminated) இந்த கேமரா வெளியாகியுள்ளது.

இவ்வகை சென்சாருக்கு ஏற்றவகையில் பியான்ஸ் XR எனும் புதிய வகை பிராஸஸரை சோனி நிறுவனம் முதல்முறையாக அறிமுகம் செய்துள்ளது. இந்த பிராசசரின் வேகமானது முன்னர் வெளியிடப்பட்ட பிராஸஸரை காட்டிலும் எட்டு மடங்கு அளவிற்கு கூடுதல் வேகமாக செயல்படக் கூடியது. இந்த பிராசசரில் இரண்டு சிப்கள் பொருத்தப்பட்டுள்ளன. (இதற்கு முன்பு ஒரு சிப் மட்டுமே இருந்தது) இந்த இரண்டு சிப்பில் ஒரு சிப் இமேஜ் மற்றும் வீடியோ பிராசசிங் வேலைகளை செய்கிறது. இன்னுமொரு சிப் ரெக்கார்டிங் ஆகும் டேட்டா ஃபைல்களைஎழுதுவதற்கும் , பஃப்பரின் வேலைகளையும் கவனித்துக் கொள்கிறது. மேலும் கேமராவை பேனிங் செய்யும் போது ஏற்படும் ரோலிங் ஷட்டரின் குறைபாடுகளை நீக்குகிறது,

குறைந்த ஒளியிலும் உயர் தரத்துடன் கூடிய பதிவுகளை செய்யும் அளவிற்கு ISO தரம் உள்ளது. 4 லட்சத்து 9 ஆயிரத்து 600 எனும் அளவில் ஐஎஸ்ஓ உள்ளது. அதி வேகமாக செயல்படக்கூடிய ரியல் டைம் ஆட்டோ போக்கஸ், மேலும் ஃபேஸ் டிராக்கிங்- டிராக்கிங் போன்றவை முன்பு இருந்ததைக் காட்டிலும் 30 ச தவீத அளவிற்கு மேலும் மேம்படுத்த பட்டுள்ளது. துல்லியமாக விரைந்து விரைவாக செயல்படும் 759 ஆட்டோ போக்கஸ் பாயிண்ட், உயர்தர ரெசுலேச னுடன் கூடிய வீயுபைண்டர், டில்ட்அப் ஸ்க்ரீன், அவ்வப்போது ஏற்படும் பலர்




குறைபாடுபாளை நீக்கிட புதிய ஒயிட் பேலன்ஸ் சென்ஸாரை முதல் முறையாக சோனி நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது.

புதிய பிராசசரின் வேகத்திற்கு ஏற்ப கேமராவில் இரண்டு UHS&2 கார்டு ஸ்லாார்ட் உள்ளது. இதில் அதிவேகமாக செயல்படத் கூடிய CF Express type A கார்டு அல்லது SD கார்டு இரண்டில் ஒன்றை பயன்படுத்தி கொள்ளலாம்.குறிப்பாக 4K வீடியோவை 120p யில் பதிவு செய்யும் (24p,30p,60p,) முதல் மிரர்லஸ் கேமரா இது ஆகும்.

மேலும் சினி மேக்கிங்கை செய்பவர்கள்,போஸ்ட் புரோடக்சன் செய்ய வசதியாக இருக்கும்,10 பிட் ஃபைல் 4:2:2 எனும் புதிய பார்மெட்டில் செய்துகொள்ளலாம். மேலும் இனி பிரபலமாகப் போகும் 16 பிட்டுக்கும் HDMI அவுட்புட் எடுத்து சோனி நிறுவனம் அசத்தி உள்ளது. இது தவிர மேலும் ஒரு அட்வான்ஸ் கொடாக்கான HEVC/H.265 அறிமுகம் செய்துள்ளது. இது 1GB அளவிலான வீடியோவை எவ்வித இழப்பு இன்றி 500MB அளவில் கம்ப்பிரசன் செய்து கொள்ள முடியும். மேலும் பல சிறப்புக்களை கொண்ட சோனி a7s மார்ச் 3 மிரர்லஸ் ஃபுல் ஃபிரேம் கேமராவிற்கு இளைஞர்கள் மத்தியில் மிகவும் பிரபலமாகி வருகிறது.

# கேனான் EOS & R6 புதுவகை மிரர்லஸ் ஃபுல் ஃபிரேம் கேமரா

கேனான் நிறுவனம் தனது புதியரக EOS & R6 வகையை சேர்ந்த மிரர் லஸ் ஃபுல் ஃபிரேம் கேமராவை தற்போது அறிமுகம் செய்துள்ளது. வீடியோ மற்றும் புகைப்படக் கலைஞர்கள் எளிதில் கையாளும்படி EOS&R6 கேமரா வடிவமைக்கப்பட்டுள்ளது. 20.1 மெகாபிக்ஸல், சீமோஸ் சென்சாருடன் இந்த கேமரா வெளியாகி யுள்ளது. தற்போது பெரும்பாலான தொழில்முறை புகைப்பட கலைஞர்கள் விரும்பும் டூயல் பிக்சல் ஆட்டோ போக்கஸ் எனப்படும் சப்ஜெக்ட் டிடக்ஷன் மற்றும் கண்களை விட்டு நீங்காத ஃபேஸ் டிடக்ஷன் EOR & R6 போன்றவை இந்த கேமராவின் சிறப்பம்சம், இதன் இயக்கத்திற்கு கேனானின் மேம்படுத்தப்பட்ட புதிய வெர்சன் வலு சேர்க்கிறது. R6 கேமராவில் எலக்ட்ரானிக் ஷட்டரை பயன்படுத்தி ஒரு நொடிக்கு 20 போட்டோக்கள் வரை ப்ளாக் அவுட் இல்லாமல் சைலன்ட் ஷூட்டாக படம் எடுக்க முடியும். இதையே மெக்கானிக் ஷட்டரில் எடுத்தால் ஒரு நொடிக்கு 12 போட்டோக்கள் எடுக்க முடிகிறது. கேமராவின் கேமராவின் ISO ஒரு லட்சத்து 2400 என்கிற அளவில் உள்ளது.




UHS&2 டூயல் கார்டு ஸ்லாார்ட், மைக்ரோ HDMI போர்ட், கைக்கு அடக்கமான கேமரா கிரிப், மழைச்சாரல் தூசி போன்றவைகளை தாங்கும் அளவிற்கு சிறப்பான கேமராவின் வெதர் சீலிங், பிளிப் அவுட் ஸ்கிரீன், ஹை ரேசொலியேசனுடன் கூடிய வியூ பைண்டர், ISO, ஒயிட் பேலன்ஸ், அப்ரேச்சர் போன்ற மோடுகளை கஸ்டமைஸ் செய்து வைத்துக் கொள்ளக்கூடிய புதிய செட்டிங் மொடு, பேட்டரியை பொருத்த வரை கேனான் யூசர் ஏற்கனவே பயன்படுத்தி வரும் LPE6 நீண்ட நேரம் பயன்படுத்தும் வகையில் உள்ளது.

வீடியோவை பொறுத்தவரை 4கே ஃபுல் ஃபிரேம் எனும் அளவில் உள்ளது. 60fpsல் அல்ட்ரா ஸ்லோமோஷனிலும், 120fpsல் ரெக்கார்டிங் செய்ய முடிகிறது. கேமராவில் ஐந்து ஸ்டாப் இமேஜ் ஸ்டபிலிஷயேசன் இருந்தாலும், RF லென்சை பயன்படுத்தும்போது அதிர்வு இல்லாத 8 ஸ்டாப் இமேஜ் ஸ்டபிலிஷயேசன் கிடைக்கிறது. இமேஜையும் துல்லியமாக காண முடிகிறது. HDR ரெக்கார்டிங் 10 பிட் ரைட்டிங் என போட்டோ வீடியோ கிராபர்கள் திருப்திப்படுத்தும் வகையில் கேனான் கீ6 கேமரா உள்ளது

# சென்சார்கள்

பொதுவாக சென்சார் என்றதுமே டிஜிட்டல் கேமராவில் நமக்கு நினைவில் வருவது இமேஜ் சென்சார்தான். ஏனெனில் பெரும்பாலும் இமேஜ் சென்சாரை அதிக ஒளிப்படக்கலைஞர்கள் நன்கு அறிந்திருப்பார்கள். அதைத் தவிர டிஜிட்டல் கேமராக்களில் இன்னும் இரண்டு முக்கிய சென்சார்கள் உள்ளது. அவைகள் என்னவென்று பார்ப்போம்.

ஒன்று ஆட்டோ போகஸ் சென்சார், மற்றொன்று எக்ஸ்போசர் மீட்டரிங் சென்சார். உதாரணத்திற்கு நிக்கான் நிறுவனத்தை எடுத்துக் கொண்டால் டிஜிட்டல் கேமரா வெளியிட்ட நாளிலிருந்து இன்று வரை ஒவ்வொரு புதிய கேமரா ரிலீஸ் செய்யும்போதும் மூன்று சென்சார்களிலும் தொடர்ந்து அப்டேட் செய்து கொண்டே இருக்கின்றனர்.

இமேஜ் சென்சாரில் பிக்சல்கள் உள்ளது போல் மற்ற இரண்டு சென்சார்களிலும் பிக்சல்கள் உள்ளது என்பதை ஒளிப்படக் கலைஞர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதுதான் இக்கட்டுரையின் நோக்கம்.

மேலும் இமேஜ் சென்சார் எவ்வாறு படத்தை பதிவு செய்வதில் முக்கிய பங்கு வகிக்கிறதோ அதே போல் மற்ற இரண்டு சென்சார்களில் உள்ள பிக்சல்களும் தனது வெள;வேறான பணியை செய்கிறது. (பிக்சல்களை சென்சார் என்றும் அழைக்கலாம்)

முதலில் நிக்கானின் ஆட்டோ போகஸ் பற்றி பார்ப்போம். ஆட்டோ போகஸ் சென்சாரை பிக்சல்களின் எண்ணிக்கைகளில் எப்படி ஆரம்பத்திலிருந்து மேம்படுத்தி உள்ளார்கள் என்பதை அதிக ஒளிப்படக்கலைஞர்கள் பயன்படுத்தும் நிக்கான் கேமராவின் சில முக்கிய மாடல்களை மட்டும் பார்ப்போம்.

ஒவ்வொரு ஆட்டோ போகஸ் சென்சார் மற்றும் எக்ஸ்போசர் மீட்டரிங் சென்சார்களின் பெயர்களுடன் TTL என்ற வார்த்தை இணைந்தே வரும், அதற்கு காரணம் அவைகள் லென்ஸ் வழியாக இயங்குகிறது என்பதை அறிந்து கொள்வதற்காக.

லென்ஸ் வழியாக (TTL) கேமராவின் இமேஜ் சென்சாருக்கும், சப்ஜெக்டுக்கும் இடையேயுள்ள தூரத்தை எலக்ட்ரானிக் ரேன்ஜ்பைன்டர் மூலம் துல்லியமாக அளந்து படப்பதிவிற்கு ஆட்டோ போகஸ் சென்சார் உதவுகிறது.

ஆட்டோ போகஸ் சென்சாரானது, வியூபைன்டர் போட்டோகிராபியில் TTL Phase Detection AF என்ற முறையிலும், மற்றும் லைவ் வியூ போட்டோகிராபியில் Contrast detect AF என்ற முறையிலும் இயங்குகிறது.

ஆட்டோ போகஸ் சென்சார் ஆனது நிக்கானின் ஒவ்வொரு மாடல்களிலும் பிக்சல்களின் எண்ணிக்கை முலம் தனது பணியை எவ்வாறு மேம்படுத்துகிறது என்பதை சற்று விளக்கமாக பார்க்கலாம்.

நிக்கான்

D90 கேமராவில் Nikon Multi&Cam 1000 auto focus sensor module with TTL phase detection என்ற பெயரில் 1000 பிக்சல்களுடன் செயலாற்றுகிறது. இந்த கேமரா 2008-ஆம் ஆண்டு வெளி வந்தது.

நிக்கான் D7200, D7500, D750 போன்ற மாடல்களில் 3500 பிக்சல்களுடன், II என்ற புதிய பெயரில் இதற்கு முன் வந்த மாடல்களை விட ஆட்டோ போகஸ் இன்னும் சிறப்பாக செயலாற்றுகிற விதத்தில் அமைத்திருக்கிறார்கள்.

இதில் D7200 மாடலும், ஈ750 மாடலும், 2014-ஆம் ஆண்டு வெளி வந்தது. ஈ7500 மாடல் 2017-ஆம் ஆண்டு வெளி வந்தது.

நிக்கான் ஈ810 கேமராவில்; 3500 பிக்சல்களுடன், FX என்ற புதிய பெயரில் ஆட்டோ போகஸை சற்று மேம்படுத்தி அமைத்திருக்கிறார்கள்.

இந்த கேமரா 2015-ஆம் ஆண்டு வெளி வந்தது.

நிக்கான் D5, D850 கேமராக்களில் 20,0000 பிக்சல்களுடன், ஆட்டோ போகஸை நன்கு மேம்படுத்தி அமைத்திருக்கிறார்கள்.

இதில் D5 மாடல் 2016-ஆம் ஆண்டு வெளி வந்தது. D850 மாடல் 2018-ஆம் ஆண்டு வெளி வந்தது.

ஆரம்பத்தில் வெளி வந்த நிக்கான் D90 கேமராவை விட 20 மடங்கு பிக்ச ல்கள் எண்ணிக்கையுடன் D5 கேமராவும், சென்ற ஆண்டு வெளிவந்த D850 கேமராவும் வெளிவந்திருக்கிறது. இந்த பிக்சல்களின் எண்ணிக்கைகளின் அடிப்படையில் ஆட்டோ போகஸ் எவ்வளவு வேகமாக செயலாற்றும் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

தற்போது புதியதாக வெளிவந்த நிக்கான் மிர்ரர்லெஸ் நூ வரிசை கேமராக்களில் ஆட்டோ போகஸ் சென்சார் இல்லை. அதன் வேலையை இமேஜ் சென்சார் செய்கிறது. எனவே Hybrid Phase detection / Contrast AF with AF assist என்ற முறையில் ஆட்டோ போகஸ் செயல்படுகிறது என குறிப்பிட்டுள்ளார்கள்.

இன்னொரு சென்சாரான ஒளியை அளவீடு செய்யும் எக்ஸ்போசர் மீட்டரிங்ஸ் சென்சாரை பற்றி பார்ப்போம்.

நிக்கான் கேமராவில் எக்ஸ்போசர் மீட்டருக்கு TTL எக்ஸ்போசர் மீட்டரிங்; RGB சென்சார் என்று பெயர். இந்த சென்சாரும் பிக்சல்களின் எண்ணிக்கைகளின் அடிப்படையிலதான்; செயலாற்றுகிறது. இந்த பிக்சல்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாடல் வெளிவரும்போதும் ஆட்டோ போகஸ் சென்ச ார்கள் போலவே மேம்படுத்திக்கொண்டே வருகிறார்கள்.

எக்ஸ்போசர் மீட்டரிங்; பணியானது நாம் படப்பதிவு அமைக்கும் பிரேமை பல பகுதிகளாக பிரித்து ஒளியை துல்லியமாக அளவீடு செய்து படப்பதிவை அமைக்கிறது.

எக்ஸ்போசர் மீட்டரிங்; வகைகளில் நாம் எதை தேர்வு செய்கிறோமோ, அவ்வகைக்கு ஏற்றவாறு மேனுவலாகவும் ஆட்டோவாகவும் செயல்படுகிறது.

இந்த எக்ஸ்போசர் மீட்டரிங்; சென்சார் ஒவ்வொரு மாடல் கேமராவிலும் பிக்சல்களின் எண்ணிக்கை வேறு வேறாக அமைந்துள்ளது. அவைகளை பற்றி சற்று விளக்கமாக பார்ப்போம்.



நிக்கான் D90 கேமராவில் TTL எக்ஸ்போசர் மீட்டரிங் 420&segment RGB sensor என்ற பெயரில் 420 பிக்சல்கள் எண்ணிக்கையில் செயல்படுகிறது.

D7200 மாடல் கேமராவில் 2016 பிக்சல்கள் எண்ணிக்கையில் தனது முந்தைய மாடல்களை விட சற்று மேம்படுத்தி அமைத்திருக்கிறார்கள்.

D750 மாடல் கேமராவில் 91000 பிக்சல்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் நன்கு மேம்படுத்தி அமைத்திருக்கிறார்கள்.

D5, D7500, D850 மாடல் கேமராக்களில் 1,80,000 பிக்சல்கள் எண்ணிக்கையில் தனது முந்தைய மாடல்களை விட இரண்டு மடங்கு மேம்படுத்தி அமைத்திருக்கிறார்கள்.

D5, D850 போன்ற உயர் ரக கேமராக்களில் பயன்படுத்தப்படும் எக்ஸ்போசர் மீட்டரிங்; ஆனது கிராப் சென்சார் கேமராவான D7500 மாடலில் பயன்படுத்தியிருப்பது சிறப்பானதாகும்.

மேலும் D90 கேமரா வந்தபோது எக்ஸ்போசர் மீட்டரிங் சென்சாரில் இருந்த பிக்சல்களின் எண்ணிக்கையை வெறும் 420 தான். ஆனால் தற்போது வெளிவந்திருக்கிற D850 கேமராவின் பிக்சல்களின் எண்ணிக்கை 1,80,000 ஆகும். இதிலிருந்தே எக்ஸ்போசர் மீட்டரிங் சென்சாரை எவ்வளவு மேம்படுத்தியிருக்கிறார்கள் என்பதையும், அவற்றின் தரமான செயல்பாடுகளையும் பற்றியும் தெரிந்து கொள்ளலாம்.

தற்போது வெளிவந்த நிக்கான் மிர்ரர்லெஸ் Z வரிசை கேமராக்களில் தனியாக எக்ஸ்போசர் மீட்டரிங் சென்சார் இல்லை, அதன் வேலையை இமேஜ் சென்சார் செய்கிறது என்று மட்டும் குறிப்பிட்டுள்ளார்கள்.

நிக்கான் கேமராக்களில் Scene Regonition System என்ற முறையில் இமேஜ் சென்சார், எக்ஸ்போசர் மீட்டரிங் சென்சார் மற்றும் ஆட்டோ போகஸ் சென்சார் இவை மூன்றும் ஒன்றுடன் ஒன்று இணைந்து கேமராவில் சில பணிகளை செய்யும். மிர்ரர்லெஸ் கேமராக்களில் மற்ற இரண்டு சென்சார் இல்லாத காரணத்தால் இமேஜ் சென்சாரே எல்லா பணிகளையும் செய்கிறது.

என்ன நண்பர்களே, இமேஜ் சென்சாரை போல மற்ற இரண்டு சென்சார்களை பற்றியும், அவற்றிலுள்ள பிக்சல்களை பற்றியும் கற்றிருப்பீர்கள் என நம்புகிறேன். நன்றி அன்புடன் அட்மின், திருச்சி நிக்கான் டெக்னிக்கல் கிளப்.


- புலிவலம் ரவி (திருச்சி)-9442777240



# HARD DISK DATA RECOVERY

(World Class Data Recovery Tools)

## HARD DRIVE CRASHED




## NO WORRIES



## WE CAN RECOVER DATA

Recover data from damaged /broken Hard Drives



Advanced CLASS 100 CLEAN ROOM for recovering data from Physically Damaged Hard drives

(100% Data Security & Privacy Gurantee)

**VISUAL COMPUTER**

48/51,Mookathal Street,Purasawakkam,
Chennai- 600 007.

**99405 37049**
**M. RAJESH**



# Selfie Photo Booth ◆ Magic Mirror Booth

## Sales and Rental




**Chennai Selfie Photo Booth**

- Slim Type New Model
- 60 In Magic Mirror
- 32 In Multi Touch display
- i3 Configuraion NUC PC
- Canon 1300D DSLR Camera
- FUJI ASK 300 THERMAL Printer

**₹.2,50,000 Only**

**உங்களின் செல்பி புகைப்படம் பிரிண்ட்டுடன் உடனுக்குடன்**

புகைப்படம் எடுத்த உடன் பேஸ்புக் , டுவிட்டர், மற்றும் இ மெயிலில் பகிர்ந்துக் கொள்ள முடியும்.



Prop. A.Loganathan -
Shadow Digital Studio
9941430991
9710220000

148, Prithvi Apartments, Perambur Barracks Road,
(Opp. Old Vasanthi Theatre), Purasawalkam, Chennai - 600 007.
E-mail : chennaiselfiephotobooth@gmail.com
www.chennaiselfiephotobooth.com

# JVC

## AUTHORIZED SUPPLIER



JY-HM70E | JY-HM90 | JY-HM360E | GY-HM170E



GY-HM190AG | GY-HM250E | GY-HM250ESB | GY-LS300CHE



GY-HM620E | GY-HM660RE | GY-HC500E



GY-HC550E | GY-HC500 | GY-HC550

## Kelaish Electronics Pte Ltd

**28 Kallang Place, #05-07, Singapore 339158.**
**Tel: +65 6348 0771, Fax: +65 6348 0772**
**Email: kelaish@kepl.sg, Website: www.kepl.sg**

**Contact Person: Mr. Amar Pangare**
**Mobile/ WhatsApp: +65 9752 4170**
**Skype: amarpangare30, Email: amar@kepl.sg**

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper,
**RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**

Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821
Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,**
No.8. Muktharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351

**If undelivered please return to**
**Chennai Video & Photographers' Association,**
**at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 28607821**

Postal Registration no TN/ARD/11/2021-2023 WPP License No: TN/PMG/CCR/WPP 557/2021-2023
Posted at Egmore RMS/I (Partika Channel) Posted on 13.01.2021

**To**